**செய்தி வெளியீடு எண்:717** **நாள்: 27.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.10.2017) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 காவலர்களுக்கான பாளையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும் 33 கோடியே 11 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 153 காவலர் குடியிருப்புகள், 8 காவல் நிலையங்கள், 3 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 காவலர்களுக்கான பாளையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றம் போக்குவரத்து மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு 4 குடியிருப்புகள், நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆயுதப்படை வளாகத்தில் 18 குடியிருப்புகள், தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரத்தில் 32 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – இலத்தூர் மற்றும் ஆலங்குளத்தில் 31 குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டம் – ம.புதுப்பட்டியில் 12 குடியிருப்புகள் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – காக்குப்பம் ஆயுதப்படை வளாகத்தில் 56 குடியிருப்புகள், என 18 கோடியே 59 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 153 காவலர் குடியிருப்புகள்;

இராமநாதபுரம் மாவட்டம் – கீழத்தூவல் மற்றும் திருப்பாலைக்குடி, தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை தாலுக்கா, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் தாலுக்கா மற்றும் விருதுநகர் மாவட்டம் – தளவாய்புரம் ஆகிய இடங்களில் 4 கோடியே 63 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 காவல் நிலையங்கள்;

சென்னை பெருநகர் – இராயபுரத்தில் சமுதாய நலக்கூடம், கோயம்புத்தூர் மாவட்டம் – கோவைபுதூரில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4ஆம் அணிக்கான பாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – நவல்பட்டில் மேம்படுத்தப்பட்ட காவல் பயிற்சி பள்ளி என 9 கோடியே 88 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவல் துறை கட்டடங்கள்;

என மொத்தம் 35 கோடியே 85 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவலர்களுக்கான பாளையங்கள், காவலர் குடியிருப்புகள், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ந. தமிழ்செல்வன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 27.10.2017**